# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## ரண்டாம் வருட முதலாம் அரையாண்டு கல்விமாணித் தேர்வு– 2012/2013 (2016 - மார்ச்/ஏப்ரல்)

## EDS 2133 கல்வியின் தத்துவஅடிப்படைகள் (Philosophical Foundations of Education)

நரம்: 03 மணித்தியாலங்கள்

விரும்பிய நான்கு (04) வினாக்களுக்கு விடை எழுதுக.

---

1. (அ) "காலத்திற்குக் காலம் தோற்றம்பெற்ற தத்துவக் கருத்துக்களின் அடிப்படையில் கல்விக்கான வரைவிலக்கணம் மாற்றமடைந்துள்ளது". இக்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு கல்விக்கும் தத்துவத்திற்கும் உள்ள தொடர்பினை மதிப்பீடு செய்க. (12 புள்ளிகள்)

   (ஆ) இலங்கையின் கல்வி இலக்குகளை அடைந்துகொள்ளும் வகையில் தற்காலத்தில் உருவாக்கப்பட்டுள்ள பாடசாலைக் கலைத்திட்டத்தில் உள்ளடங்கியிருக்கும் கல்விசார் தத்துவக் கருத்துக்களைப் பகுப்பாய்வுசெய்க. (13 புள்ளிகள்)

2. (அ) இலட்சியவாத, பயன்பாட்டுவாத கல்வித் தத்துவங்களில் கூறப்படும் கற்பித்தல் முறைகளைக் குறிப்பிட்டு அவற்றில் காணப்படும் பண்புகளுள் தற்காலத்திற்குப் பொருத்தமானவற்றை எடுத்துரைக்க. (12 புள்ளிகள்)

   (ஆ) மாணவர்மைய கல்வித் தத்துவத்தில் செயன்முறைசார்ந்த கற்பித்தல் முறையின் முக்கியத்துவத்தினை தற்காலப் பாடசாலைக் கல்விமுறையை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க. (13புள்ளிகள்)

3. (அ) சிரேஷ்ட இடைநிலை வகுப்புக்களில் கல்விகற்கும் மாணவர்களிடத்தே ஆக்கபூர்வமான விழுமியம்சார் பண்புகளைக் கட்டியெழுப்புவதில் ஒரு பாடசாலை எவ்வாறு செயற்படவேண்டும் என்பதை உதாரணங்களை முன்வைத்து விளக்குக. (12 புள்ளிகள்)

   (ஆ) "மேலைத்தேய, கீழைத்தேய தத்துவஞானிகள் கல்விதொடர்பாக வேறுபட்டகல்வித் தத்துவக் கருத்துக்களை முன்வைத்திருந்தாலும் சில முக்கியகருத்துக்களை அவை வேறுபிரிப்பதில்லை" கார்ள் மார்க்சினதும்,

விவேகானந்தரினதும் கல்வித் தத்துவகருத்துக்களில் காணப்படும் ஒற்றுமைகளை ஒப்பீட்டுரீதியில் நோக்குக. (13 புள்ளிகள்)

4. (அ) "சமூகமாற்றத்தை ஏற்படுத்துவதில் கல்வி ஒரு சிறந்தகருவியாகச் செயற்படுகின்றது" நீர் வாழும் சூழலில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு வேறுபட்ட அறிஞர்களால் முன்வைக்கப்பட்ட கல்வித்தத்துவக் கருத்துக்களை எவ்வாறு பயன்படுத்துவீர் என்பதை விளக்குக. (13 புள்ளிகள்)

(ஆ) ரவீந்திரநாத் தாகூரின் கல்வித்தத்துவக் கருத்துக்களில் ஒழுக்கம் தொடர்பாக முன்வைக்கப்பட்டவை இன்றைய முறைசார் கல்வியில் எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதை விமர்சிக்குக. (12 புள்ளிகள்)

5. (அ) இலங்கையில் தொழிற்கல்வி அபிவிருத்திச் செயற்பாட்டில் ஆசிரியர் வாண்மை விருத்திக்காக மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் தொழிற்பாடுகளை பகுப்பாய்வுசெய்க. (10 புள்ளிகள்)

(ஆ) "விளையாட்டுக்களின் ஊடாகவே குழந்தைகளின் அனைத்து ஆற்றல்களும் விருத்திசெய்யப்படுகின்றன" எனும் பிரெட்றி புரோபலின் முன்பள்ளி கல்விதத்துவத்தினை மெருகூட்டுவதற்காக றடொல்ப் ஸ்ரெய்னர் மரியாமொன்ரிசோரி ஆகியோரால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் இன்றைய முன்பள்ளிக் கல்வியில் எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதை தெளிவுபடுத்துக. (15 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றிற்குரிய விளக்கக் குறிப்புக்களைச் சுருக்கமாகத் தருக.

1. ஜோன் எமோஸ் கொமேனியசின் இறையியல் கல்விச் சிந்தனைகள்
2. உலகமயமாக்கலில் கல்வி
3. செயன்முறைசார் கற்பித்தலில் கல்வித்தொழில்நுட்பம்
4. ரூசோவின் கல்வித் தத்துவத்தில் பெண்கல்வி.
5. மிஷேல் பூக்கோவின் அறிவுக் குவியம்.

(5X5=25புள்ளிகள்)